**செய்தி வெளியீடு எண்:548** **நாள்: 23.08.2017**

## செய்தி வெளியீடு

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (23.8.2017) அரியலூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா
அவர்களை வணங்குகிறேன்.

புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த மகத்தான விழாவிற்கு
சிறப்புரை ஆற்றிய
தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **தனபால்** அவர்களே!

அற்புதமான கருத்துக்களை உங்களிடத்திலே எடுத்துவைத்து, இன்றைக்கு இணைந்து சிறப்பித்திருக்கின்ற, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களும் கண்ட கனவை நனவாக்குவதே எங்களுடைய இலட்சியம் என்ற இலட்சியப் பாதையில் இணைந்திருக்கின்ற, இன்றைய தினம் மேடையிலே 6 மாதத்திற்குப் பிறகு இணைந்து ஒன்றாக பேசுகின்ற காட்சி உன்னத மகிழ்ச்சி அளிக்கின்றது. அந்த உன்னத மகிழ்ச்சிக்கு வேண்டியவர் கழகத்தினுடைய பொருளாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பன்னீர்செல்வம் அவர்களே

மாண்புமிகு துணை முதல்வர்
திரு.**ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

இங்கே சிறப்பான கருத்துகளை வழங்கி அமர்ந்திருக்கின்ற
மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **தம்பிதுரை** அவர்களே!

சுருக்கமான நல்ல, பல கருத்துக்களை எடுத்துவைத்து அமர்ந்திருக்கின்ற
மாநிலங்களவை உறுப்பினர்
திரு.**வைத்திலிங்கம்** அவர்களே!

வந்திருக்கின்ற மக்கள் வெள்ளத்தைப் பார்க்கின்றபொழுது இது அரியலூரில் நடந்து கொண்டிருக்கின்ற பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர்எம்.ஜி.ஆர் அவர்களுடைய பொதுக்கூட்டம் அல்ல, இது மாநில மாநாடுபோல் காட்சியளிக்கின்ற அளவிற்கு சிறப்பான ஏற்பாட்டைச் செய்து, இன்றைக்கு அரியலூர் மாவட்டத்தில் இருக்கின்ற அத்தனை மக்களும் இங்கே குழுமி பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர்எம்.ஜி.ஆர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை சிறப்பாக நாங்கள் சொல்கின்ற அளவிற்கு மக்கள் வெள்ளம் குழுமியிருக்கின்ற அந்தக் காட்சியை ஏற்படுத்திய
இந்த மண்ணின் மைந்தர் முன்னிலையுரை ஆற்றிய
அரசு தலைமைக் கொறடா
திரு. **இராஜேந்திரன்** அவர்களே!

வரவேற்புரையாற்றிய தமிழ்வளர்ச்சி மற்றும்
செய்தித்துறை செயலாளர்
திரு. **ஆர்.வெங்கடேசன்** அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய
சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர்
திரு. **மா.சந்திரகாசி** அவர்களே!

ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர்
திரு. **ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்** அவர்களே!

குன்னம் சட்டமன்ற உறுப்பினர்
திரு.ஆர்.டி.ராமச்சந்திரன் அவர்களே!

அமைச்சர் பெருமக்கள்,
திரு. **திண்டுக்கல் சி. சீனிவாசன்** அவர்களே!
திரு. **கே.ஏ. செங்கோட்டையன்** அவர்களே!
திரு. **செல்லூர் கே. ராஜூ** அவர்களே!
திரு.**டி.ஜெயக்குமார்** அவர்களே!
திரு. **கே.பி.அன்பழகன்** அவர்களே!

திரு. **எம்.சி.சம்பத்** அவர்களே!
திரு. **கே.சி.கருப்பணன்** அவர்களே!
திரு. **ஆர்.காமராஜ்** அவர்களே!
திரு. **ஓ.எஸ். மணியன்** அவர்களே!
திரு. **உடுமலை கே.ராதாகிருஷ்ணன்** அவர்களே!

டாக்டர் **சி.விஜயபாஸ்கர்** அவர்களே!
திரு. **இரா.துரைக்கண்ணு** அவர்களே!
திரு. **கடம்பூர் ராஜூ** அவர்களே!
திரு.**ஆர்.பி. உதயகுமார்** அவர்களே!
திரு. **வெல்லமண்டி என்.நடராஜன்** அவர்களே!

திரு. **கே.சி.வீரமணி** அவர்களே!
திரு. **கே.டி.ராஜேந்திர பாலாஜி** அவர்களே!
டாக்டர் **நிலோபர் கபில்** அவர்களே!
திரு. **எம்.ஆர்.விஜயபாஸ்கர்** அவர்களே!

டாக்டர் **எம்.மணிகண்டன்** அவர்களே!
திருமதி. **வி.எம்.ராஜலட்சுமி** அவர்களே!
திரு. **கே. பாண்டியராஜன்** அவர்களே
திரு. **ஜி.பாஸ்கரன்** அவர்களே!
திரு.**சேவூர் எஸ்.இராமச்சந்திரன்** அவர்களே!
திருமதி. **எஸ்.வளர்மதி** அவர்களே!
திரு. **பி. பாலகிருஷ்ணா ரெட்டி** அவர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர்
திருமதி **பா.வளர்மதி** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள
அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர்
திருமதி **க. லட்சுமி ப்ரியா**, அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்கள் அவர்களே,

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

வருகைபுரிந்திருக்கின்ற தலைமைக் கழகத்தினுடைய நிர்வாகிகளே,

முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகளே,

கூட்டுறவு சங்க நிர்வாகிகளே,

வருகை புரிந்திருக்கின்ற கழகத்தினுடைய அனைத்துமட்ட நிர்வாகிகளே,

கிளைக் கழகத்தினுடைய நிர்வாகிகளே,

அரசு அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,
வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,
இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
நலத்திட்டப் பயனாளிகளே!
அத்தனைபேருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை சமர்ப்பித்து,

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்
கொள்கிறேன்.

வரலாற்றுக்கு முந்தைய பழமையும்,
பல மன்னர்களின் ஆளுகையும்,
ஆன்மீக அறநிலையங்களையும்,
கட்டிடக்கலையின் தொகுப்பையும்,

தொழிற்சாலைகளையும், தன்னகத்தே கொண்டு தமிழ்நாட்டின் நடுநாயகமாக
விளங்கும்
அரியலூர் மாவட்டம்,
ஒரு அற்புதமான மாவட்டமாகும்.

இப்போது அரியலூராக இருக்கும் இந்த நிலம்,
மனித இனம் தோன்றுவதற்கு முன்
கடலுக்கு அடியில் மூழ்கி இருந்தது.
பிற்காலத்தில், கடல்நீர் கிழக்கு நோக்கி நகர்ந்ததால்,
உருமாறிய பாறைகள், நிலமாக வெளிப்பட்டது.

அதன்பிறகு தான் மனிதர்கள்
அங்கே குடியேறத் தொடங்கினார்கள்.

வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள்
வாழ்ந்த பகுதியான அரியலூர் மாவட்டம்,
**'புவியியல் ஆராய்ச்சியாளர்களின் மெக்கா'**
என்று அழைக்கப்படுகிறது.
மரம், விலங்கு மற்றும் தாவர இனங்களில்
பல்வேறு வகையான படிமங்கள்
இம்மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுகின்றன.

'டைனோசர்' முட்டைகள் கூட
இந்த மாவட்டத்திலுள்ள **கல்லங்குறிச்சியில்**
கண்டு எடுக்கப்பட்டுள்ளன.
எனவே, இந்த மாவட்டத்தை
**'தொல்லுயிர் விலங்கியல் பூங்கா'**
என்றும் அழைக்கிறார்கள்.

வில் வித்தையில் சிறந்து விளங்கிய **ஓரி மன்னன்,** இந்த அரியலூரை
ஆண்டிருக்கிறான்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து
ஒன்பதாம் நூற்றாண்டு வரை
அரியலூர் மாவட்டம் பல்லவப் பேரரசின்
ஒரு பகுதியாக இருந்திருக்கிறது.

ராஜராஜ சோழன் காலம் வரை
தஞ்சாவூர் தான் சோழர்களின்
தலைநகராக இருந்திருக்கிறது.

அதன் பிறகு வறண்ட பகுதியாக இருந்த,
இந்த அரியலூர் பகுதியில் உள்ள
**கங்கை கொண்ட சோழபுரத்திற்கு**
தலைநகரை மாற்றி,
அதைச்சுற்றி **86** ஊர்களைத் தோற்றுவித்து,
இந்த பகுதி வளர்ச்சிக்கு வித்திட்டவர்
**ராஜேந்திர சோழன்தான்.**

தன் தந்தை **ராஜராஜசோழன்,**
**தஞ்சையில்** கட்டிய பெருவுடையார்
கோயிலைப் போலவே,
**கங்கைகொண்ட சோழபுரத்திலும்**
மிக உயரமான
வானை முட்டும் கோபுரத்துடன்

**பிரகதீஸ்வரர் கோயிலை**
ராஜேந்திர சோழன் கட்டினார்.

இந்த கோயில் **யுனெஸ்கோவால்**
உலக பாரம்பரியம் மிக்க சின்னமாக
அறிவிக்கப்பட்டுள்ளது.

ராஜேந்திர சோழன்,
இந்தியாவிற்கு வெளியே படையெடுத்து சென்று,
பல நாடுகளை வெற்றி கொண்டதால், கங்கைகொண்ட சோழபுரம்,
**தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கே**
**தலைநகரமாக** விளங்கி
தமிழனின் பெருமையை பறை சாற்றியது.

இவையெல்லாம், அரியலூர் மாவட்டம்
பெற்றுள்ள வரலாற்றுப் பெருமைகள்.

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டுவதற்கும், கங்கைகொண்ட சோழபுரம்
ஆலயத்தைக் கட்டுவதற்கும்,
இன்னும் பல திருக்கோயில்களை கட்டுவதற்கும்,
பல ஏரிகளை வெட்டுவதற்கும்,
ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள்
உடல் வலிமையோடும்,
மன வலிமையோடும் உழைத்திருக்கிறார்கள்.

சோழர் கால தொழிலாளர்களின்
தொழில்நுட்ப அறிவையும்,
கலைத்திறனையும் பார்த்து,
இப்போது இங்கு சுற்றுலா வரும் வெளிநாட்டுப் பயணிகள் வியக்கிறார்கள்
என்றால்,
உழைப்புக்கும், தொழில்நுட்ப அறிவுக்கும்,
கலை திறனுக்கும் உலகத்திற்கே தமிழன்தான்
முன்னோடியாக திகழ்ந்திருக்கிறான்
என்பது தெரியவரும்.

அதிலும் அரியலூர் தொழிலாளர் பெருமக்கள்
தமிழர்களின் கலைநுட்பத்திற்கு
முன்னுதாரணமாக வாழ்ந்திருக்கிறார்கள்
என்பதை இந்தப் பகுதியில் கிடைக்கும்
கல்வெட்டுகளிலிருந்து அறியமுடிகிறது.
முதலாம் ராஜேந்திரசோழன் முதல்
மூன்றாம் ராஜேந்திர சோழன் வரை
பதினாறு சோழ மன்னர்கள்
கங்கைகொண்ட சோழபுரத்தை
240 ஆண்டுகள் ஆண்டிருக்கிறார்கள்.

சோழர்களுக்கு பிறகு, பாண்டியர்கள்,
ஹொய்சாளர்கள், விஜயநகர மன்னர்கள்,
பீஜப்பூர் சுல்தான்கள், மராட்டியர்கள்,
கர்நாடக நவாப்புகள் போன்ற
ஆட்சியாளர்கள் ஆண்ட பூமி இது.

மன்னர்கள் ஆட்சி மாறி,
ஆங்கிலேயர்களின் அடக்குமுறையில்
அரியலூர் இருந்தபோது,
இந்த மண்ணிலிருந்து
அதிக அளவில் சுதந்திர போராட்ட வீரர்கள்
வீரிட்டு எழுந்தார்கள்.

அரியலூர் சபாபதி பிள்ளை,
நடேச அய்யர், கணபதி ரெட்டியார்,
நடராஜ பிள்ளை, ஏரவாங்குடி பத்மநாதன்,
அரியலூர் மானோஜி ராவ்,
குப்புசாமி, அபரஞ்சி, அப்பாசாமி,
வீரபத்திரன், ரங்கராஜன்,
விக்கிரமங்கலம் அழகேசம் பிள்ளை,
மணக்கால் சதாசிவம் பிள்ளை
போன்ற எண்ணற்ற தியாகிகளை
நான் இந்த நேரத்தில் நினைவு கூர்ந்து வணங்குவதோடு,
அவர்கள் பிறந்து, வாழ்ந்து, மறைந்த
இந்த புனிதமான மண்ணையும் வணங்குகிறேன்.

மேலப்பழுவூர் சுந்தரேசுவரர் கோயில்,
கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயில்,

திருமழப்பாடி வைத்தியநாத சுவாமி கோயில், காமரசவல்லி சுந்தரேசுவரர் கோயில்,
கோவிந்தபுத்தூர் கங்கஜெகதீஸ்வரர் கோயில், விக்கிரமங்கலம்,
செந்துறை, ஸ்ரீபுரந்தான்,
மற்றும் சென்னிவனம் சிவன் கோயில்கள்,

ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா ஆலயம்
போன்ற ஆன்மீக திருவிடங்களாலும்,
வேட்டக்குடி – கரைய வெட்டி
பறவைகள் சரணாலயம் போன்ற
சுற்றுலா இடங்களையும் கொண்டது
இந்த அரியலூர் மாவட்டம்.

இந்த மாவட்டத்தில் பல தனியார்
சிமெண்ட் தொழிற்சாலைகள் உள்ளன.

சுண்ணாம்பு மற்றும் கல் சார்ந்த தொழில்கள் ஏராளமாக நடைபெறுகின்றன.

எனவே,
இது உழைப்பாளர் பெருமக்களை
அதிகமாக கொண்ட மாவட்டமாக திகழ்கிறது.

எனவே தான்
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
இந்த பகுதி மக்களை
தன் உறவு மக்களாகவே நினைத்தார்கள்.

‘ஒன்று எங்கள் சாதியே, ஒன்று எங்கள் நீதியே,
உழைக்கும் மக்கள் யாவரும் –
ஒருவர் பெற்ற மக்களே’
என்று மக்கள் திலகம் உழைக்கும் மக்களை
ஒரு தாய் பெற்ற மக்களாகவே
போற்றினார்கள்.

1972 ஆம் ஆண்டுக்குப் பிறகு,
தமிழ்நாட்டின் தலையெழுத்தை
நிர்ணயிக்கக்கூடிய
ஒரு தனிமனிதராக திகழ்ந்தவர்
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

ஏழையாகப் பிறந்து,
ஏழையாக வளர்ந்து,
ஏழைகளுக்காக தமிழ்நாட்டை ஆண்டு,
ஏழைகள் இல்லாத மாநிலமாக
தமிழ்நாட்டை மாற்றிட,
ஏற்றமிகு திட்டங்கள் பலதீட்டி,
உழைக்கும் வர்க்கத்தின் உயர்வுக்கு,
அல்லும் பகலும் உழைத்து,

தான் உயர்ந்த பதவிக்கு வந்த பின்பும்,
கடைசிவரை உழைப்பாளராகவே வாழ்ந்து,
மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில்
நீங்கா இடம் பெற்றவர்
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்,

‘இல்லாமை நீக்க வேண்டும்,
தொழில் ஆக்கம் வேண்டும்,
இங்கு எல்லோரும் வாழவேண்டும்,
முன்னேற என்ன வேண்டும்,
நல்ல எண்ணம் வேண்டும்’ – என்று
‘அன்னமிட்டகை’ என்ற படத்தில்
எம்.ஜி.ஆர். பாடினார்கள்.

படகோட்டி படத்தில்,
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்

‘நான் தனிமனிதன் அல்ல,
மக்களுக்கு கட்டுப்பட்டவன்,
நான் தலைவன் அல்ல,
தலைவன் என்ற பெயரில்,
மக்களின் அடிமை நான்’ என்று வசனம் பேசுவார்.

அதேபோல, ‘பல்லாண்டு வாழ்க’ என்ற படத்தில்
ஒரு பெண்மணி – எம்.ஜி.ஆரைப் பார்த்து,

‘இந்த உலகத்தில்
ஏழைகளுடைய கஷ்டத்தைப்
புரிஞ்சவங்க உன்ன மாதிரி
வேறு யாரும் இல்லை’ என்பார்.

இவையெல்லாம்   திரைப்படங்களுக்காக
எழுதப்பெற்ற   கற்பனை   பாடல்களாகவும்
வசனங்களாகவும் நாம் கொள்ளக்கூடாது.

திரையில்,  நடிப்புக்காக ஒரு பேச்சு,
வெளியில் ஒரு பேச்சு என்று
புரட்சித்தலைவர் பேசியதே இல்லை.

தான் மக்களுக்கு  – என்ன சொல்ல வேண்டும்
என்று நினைக்கிறாரோ,  அதை
வெண்திரையின் மூலம்  சொல்லி விடுவார்.

பொழுதுபோக்கு கலையாக இருந்த  திரைப்படங்களை,    இந்தியாவிலேயே
முதன்முதலில்,  மக்கள் நலனுக்காகவும்,
மக்கள் விழிப்புணர்வுக்காகவும்
பயன்படுத்தியவர் புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள்.

புரட்சித்தலைவர் அவர்களை  பின்பற்றிதான்,   இந்தியாவின் மற்ற மாநிலங்களில்,
திரைப்பட  கதாநாயகர்கள்
பொது வாழ்க்கைக்கு வந்தார்கள்.

புரட்சித்தலைவர் அவர்களின்
ஆலோசனைப் படிதான்,
பக்கத்து மாநிலம் ஆந்திராவில்,
திரு. என்.டி.ராமாராவ் அவர்கள்
அரசியலுக்கு வந்தார்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின்
ஆலோசனைப்படி,
அரசியல் வாழ்க்கையை  தொடங்கிய
என்.டி.ஆர். அவர்கள்
ஆந்திராவில் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
திரு. என்.டி.ஆர் அவர்களிடம்
தனக்கிருந்த தனிப்பட்ட நட்பின் மூலம்,
தெலுங்கு கங்கை திட்டத்தினை
தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்தார்கள்.

அதைப்போல, கேரளாவில்,
திரு.பிரேம்நசீர் அவர்களும்,
கர்நாடகாவில்,
திரு.ராஜ்குமார் அவர்களும்

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்களின் வழியில்
பொதுவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள்.

அதனால்தான்,
திரு.என்.டி.ஆர். அவர்களை
'ஆந்திர எம்.ஜி.ஆர்' என்றும்

பிரேம்நசீர் அவர்களை
'கேரள எம்.ஜி.ஆர்' என்றும்,

ராஜ்குமார் அவர்களை
'கன்னட எம்.ஜி.ஆர்' என்றும்
மக்கள் அன்போடு அழைத்தார்கள்.

இந்தியாவில் உள்ள நடிகர்களுக்கு, தலைவர்களுக்கு
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
முன்மாதிரியாக விளங்கியதைப் போலவே
மற்ற மாநிலங்களுக்கு,
தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக
உருவாக்கிய பெருமையும்
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்களுக்கு உண்டு.
'கலைஞர்கள் நாட்டுக்காக பாடுபடவேண்டும்.

அப்போதுதான், அவர்கள்
சிரஞ்சீவியாக வாழ்வார்கள்'
என்ற கோட்பாட்டை சொன்னவர்
எம்.ஜி.ஆர் அவர்கள்தான்.

'மக்களுக்கு எதையும் செய்யாமல்
மக்கள் தலைவன் ஆகலாம்' என்றால்
அவர்களை மக்கள் ஒருக்காலும்
ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இதை ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால்
முடியாட்சி காலத்தில்,
இந்த அரியலூர் மண்ணை
தலைநகரமாகக் கொண்டு ஆண்ட
இராஜேந்திர சோழன்,

ஆசிய நாடுகளின் பெரும்பகுதிகளை
வென்று தமிழ்நாட்டுக்கு
பெருமை சேர்த்ததைப் போல,

குடியாட்சி காலத்தில்,
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்,
தன் அன்பால், ஆளுமையால்,
உழைப்பால், உலகத் தலைவர்களின்
உள்ளங்களை வென்று, தமிழ்நாட்டிற்கு
பெருமை சேர்த்தார்கள்.
அந்த பெருமைகளையெல்லாம்
தக்கவைத்துக் கொள்வதற்காகத்தான்
தனக்குப் பிறகு,
தான் சார்ந்த இயக்கத்தை
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களிடம்
புரட்சித்தலைவர் அவர்கள் ஒப்படைத்தார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின்
சிந்தனைகளுக்கு வடிவம் கொடுத்தவர்
புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

‘நாளொரு மேடை, பொழுதொரு நடிப்பு,
அவன்பேர் மனிதனல்ல,

நாவில் ஒன்று, நினைவில் ஒன்று,
அதன்பேர் உள்ளமல்ல.

உள்ளத்தில் வைத்ததை
உதட்டில் வைப்பவன் எவனோ
அவனே மனிதன்’ என்ற

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
பாடல் புரட்சித்தலைவர் அவர்களுக்கே
பொருத்தமாக அமைந்தது.

தன் சிந்தனையில் உதித்த
தொலைநோக்கு திட்டங்களையும் செயலாக்கி,

தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர்
என்ற நிலையை உருவாக்கியவர்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

‘அண்ணாந்து பார்க்கின்ற
மாளிகைக் கட்டி,
அதன் அருகினில்
ஓலை குடிசை கட்டி,

பொன்னான உலகென்று
பெயரும் இட்டால்..
இந்த பூமி சிரிக்கும்,
அந்த சாமி சிரிக்கும்’ என்று—

புரட்சித் தலைவர் அவர்கள்
பாடியதன் நோக்கம்,
தமிழ்நாடு குடிசைகளே இல்லாத மாநிலமாக
மாற வேண்டும் என்பதுதான்..

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
ஆட்சிக் காலத்திலும்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
ஆட்சிக் காலத்திலும்..

பல்வேறு குடிசை மாற்று
வாரியத் திட்டங்களாலும்,
வீட்டு வசதி வாரிய
திட்டங்களின் மூலமாகவும்
தமிழ்நாடு குடிசைகள் இல்லாத
மாநிலமாக மாறி வருகிறது.

‘குடிசையெல்லாம்
வீடாகும் நேரத்திலே –
நாங்க தெருவோரம்
குடியேறத் தேவையில்லை

சர்க்காரு ஏழை பக்கம்
இருக்கையிலே
நாங்க சட்டதிட்டம் மீறி
இங்க நடப்பதில்லை’

என்று ‘ஒளி விளக்கு’ படத்தில்
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களும்,
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும்
மக்கள் எண்ணங்களை பிரதிபலித்திருப்பார்கள்.

அதைப்போல.. தமிழ்நாட்டு மக்கள் –
யாரும் பசியென்று – யாரிடமும்
கையேந்தும் அவலநிலை கூடாது
என்று புரட்சித்தலைவர் அவர்கள்–
எண்ணினார்கள்.

அதனால் தான்..
ரேஷன் கடைகள் மூலம்
விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்,

கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம், பள்ளிகளில் சத்துணவுத் திட்டம்,
மலிவு விலையில் அம்மா உணவகம்
என்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
வழியில் மாண்புமிகு அம்மா அவர்கள்
பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில்
செயல்பட்டு வரும் அம்மாவின் அரசும்,
பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செவ்வனே நடைமுறைப்படுத்தி,
தமிழ்நாட்டை ஏழைகள் இல்லாத
மாநிலமாக மாற்றி வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில்
பல துறைகள் மூலம்
பல கோடி ரூபாய் செலவில்
மக்கள் நலத் திட்டங்கள்
மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவைகள் அனைத்தையும்
இங்கே வரிசைப்படுத்த
நேரமில்லை.

எனினும், ஒரு சிலவற்றை
இங்கே குறிப்பிட கடமைப் பட்டுள்ளேன்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 6 ஆயிரத்து 956 சிறு குறு விவசாயிகளுக்கு 28 கோடியே 59 இலட்சம் ரூபாய் பயிர்க் கடன் அம்மா அவர்கள் இருந்த போது வழங்கப்பட்டு அது தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

- கூட்டுறவு வங்கிகளின் மூலம் 23 ஆயிரத்து 317 சிறு குறு விவசாயிகளுக்கு 90 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பிலான விவசாய கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

- அம்மா சிறு வணிகக் கடன் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 78 நபர்களுக்கு 54 இலட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

- உரிய காலத்தில் பயிர்க் கடனை
  திருப்பி செலுத்திய 95 ஆயிரத்து
  958 விவசாயிகளுக்கு, ரூபாய் 502 கோடியே 81 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

  அதற்கு தமிழ்நாடு அரசு
  30 கோடி ரூபாய் வட்டி மானியம் அளித்துள்ளது.

- கடந்த 6 ஆண்டுகளில் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ்,
  119 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏழை, எளிய குடும்பங்களுக்கு சூரிய மின் சக்தியுடன் கூடிய 6001 பசுமை வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கடந்த 6 ஆண்டுகளில் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 66 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏழை, எளிய நெசவாளர் குடும்பங்களுக்கு சூரிய மின் சக்தியுடன் கூடிய 254 பசுமை வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 48 கோடியே 51 இலட்சம் ரூபாய்
  மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்ந்த 995
  எண்ணிக்கையிலான
  ஏரி, குளம் மற்றும் குட்டைகளிலிருந்து

16 இலட்சத்து 87 ஆயிரத்து 658 கன மீட்டர் வண்டல் மண் எடுக்கப்பட்டு 16 ஆயிரத்து 536 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

- ❖ பொதுப்பணித்துறையின் மூலம் ஏரிகள் தூர்வாருதல் மற்றும் ஆற்றின் கரைகள் உயர்த்துதல் போன்ற 65 குடிமராமத்து பணிகள் 5 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வுத் துறை,
தோட்டக்கலைத் துறை,
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை,
பள்ளிக் கல்வித் துறை மற்றும்
நகராட்சி நிர்வாகத் துறை சார்பில்
5 கோடியே 53 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில், 6 நிறைவடைந்த திட்டங்கள்
இன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம்
அரியலூர் குரும்பச்சாவடி கிராமத்தில்
288 அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,

நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை,
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை,
மற்றும் உயர் கல்வித்துறை சார்பில்,
69 கோடியே, 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான

6 பணிகளுக்கு இன்று நான்
அடிக்கல் நாட்டியுள்ளேன்
என்பதையும் மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறேன்.

86 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
11 ஆயிரத்து 514 பேர் பயன்பெறும் வகையில்
பல்வேறு துறைகளின் சார்பாக
நலத்திட்ட உதவிகளும் இன்று வழங்கப்பட்டன.

‘மக்கள் நம் பக்கம் இருக்கிறார்களா என்பதை விட மக்களின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதே எப்போதும் என்னுடைய சிந்தனையாக இருக்கிறது.

என்னை நம்புகின்ற மக்களுக்கு

என்ன என்ன வழிகளில் எல்லாம்
நன்மை செய்ய இயலுமோ
அந்த வழிகளைப் பற்றியே
நான் சதா சர்வ காலமும்
சிந்தித்துக் கொண்டு இருக்கிறேன்.

அதனால் தான் என் அன்பிற்குரிய மக்களாகிய நீங்கள் எப்பொழுதும் என் பக்கம் இருக்கிறீர்கள்'
என்று மாண்புமிகு புரட்சிததலைவி அம்மா
அவர்கள் கூறினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
கூறியதையே தான் – அவர்களோடு ஆசியோடு வந்த நானும் – கூறுகின்றேன்.

சர்வசதா காலமும் உங்களுக்கு
உழைப்பதன் மூலம் தான்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்களின் ஆசியைப் பெற முடியும் என்பதால்

என் சிந்தனைகள் மட்டுமல்ல,
செயல்களும்
மக்களுக்காகவே இருக்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்,
மற்றும் மாண்புமிகு அம்மா அவர்கள்
இருவரும் ஏழை, எளிய மக்களின்
தேவைகளை அறிந்து நிறைவேற்றியதை போல,

மாபெரும் தலைவர்கள் இருவரின்
வழியில் செயல்படும்
மாண்புமிகு அம்மாவின் அரசும்

உங்கள் எண்ணம் அறிந்து
செயல்படும் என்று உறுதி கூறுகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்களின் எண்ணப்படி
தங்கு தடையின்றி மக்கள் நலத் திட்டங்கள்
மக்களுக்குச் சென்று சேர வேண்டுமென்றால்

நாம் அனைவரும் ஒரே அணியில் நின்று

ஒத்த கருத்துடன், ஒருமித்த  நோக்கத்துடன்
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக  கட்சியையும், ஆட்சியையும்
வலுப்படுத்த வேண்டும்.

சகோதர, சகோதரிகளாய் இணைந்து
ஒரே குடும்பமாக இந்த இயக்கத்தை
கொண்டு செல்ல வேண்டும்.

நாம் ஒருவருக்கொருவர்
பாசப்  பிணைப்புடன்தான்
இருக்கிறோம்;
அதை வெளிப்படுத்தியுள்ளோம்.
இயக்க தலைவர்களின்,  தொண்டர்களின்
ஒற்றுமை ஒன்றையே
மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மா அவர்களுக்கு
காணிக்கை ஆக்குவோம்.

இதை ஒரு நிகழ்வின் மூலம் கூறினால்
உங்களுக்கு நன்றாக புரியும்.

ஒரு ஊரில் சாமியார் ஒருவர்
ஆன்மீக சொற்பொழிவு செய்து
கொண்டிருந்தார்.

அதிக மக்கள் தொகை கொண்ட
ஊராக  இருந்தாலும்,
அன்று சொற்பொழிவு கேட்பதற்கு
பெரிய அளவில் கூட்டம் வரவில்லை.

வந்தவர்களும் தனித்தனியாக அமர்ந்திருந்தார்கள்.
இதைப்  பார்த்த சாமியார்
அந்த ஊர் மக்களிடையே
ஒற்றுமையில்லை என்பதை
உணர்ந்து கொண்டார்.

வந்தவர்களையெல்லாம் அழைத்து
ஒவ்வொருவருடைய கையிலும்
ஒரு கயிற்றை கட்டிவிட்டு, ஒவ்வொருவரிடமும் மேலும்  3 கயிறுகளைக் கொடுத்து,

“இதை இந்த ஊரில்
உங்களுக்கு ஏதோ ஒரு வகையில்
உதவியாக இருந்தவர்கள் மற்றும் விருப்பமானவர்கள் கைகளில் கட்டுங்கள்.

ஒவ்வொருவரும் மூன்று பேருக்கு
கட்டி விடுவதுடன்..
அவர்களிடம் மூன்று
கயிற்றையும் கொடுத்து,
அவரவர்களுக்குப் பிடித்தமானவர்களுக்கு
கட்டச் சொல்லுங்கள்.

அடுத்த வாரம் இதே இடத்தில் இதே நாள்
காலையில் நாம் இங்கு கூடுவோம்”
என்று கூறினார்.

கயிறுகளை வாங்கிக் கொண்டு
மக்கள் கலைந்தனர். மறுநாளிலிருந்து அவரவருக்குப் பிடித்தவர்களின்
கையில் கயிறு கட்டப்பட்டன.

ஒரு வாரம் முடிந்து,
சாமியாரின் கூட்டத்திற்கு மக்கள் கூடினர். சாமியாருக்கு ஆச்சரியம்!

குழந்தைகள் முதற்கொண்டு
முதியவர்கள் வரை ஊர் மக்கள் அனைவரும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

அனைவருடைய கையிலும்
கயிறு கட்டப்பட்டிருந்தன.

சாமியார் மக்களைப் பார்த்து,
“மக்களே, எனக்கு உங்களைப் பார்க்க
மகிழ்ச்சியாக இருக்கிறது.

நீங்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள்.
ஒருவருக்கொருவர்
அன்பையும், நன்றியையும்
வெளிப்படுத்திக் கொள்ளத் தெரியாமல்
இதுவரை இருந்துள்ளீர்கள்,
இப்போது இந்தக் கயிறுகள்
உங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்திவிட்டன.

இனிமேல், நீங்கள் எப்போதும் ஒற்றுமையாக
இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்"
என்று சாமியார் வாழ்த்தினார்.

இந்தக் கதையில் வருவதைப் போல நாம் ஒற்றுமையாக ஒன்றுபட்டு கட்சிக்கும், ஆட்சிக்கும் வலுமை கொடுப்போம் என்று இந்த நன்னாளில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி நடத்துகின்ற பொழுது, இந்த மக்களுக்கு என்னென்ன தேவை என்று அறிந்து செயல்படுத்தினார்கள். அதே வழியில் வந்த அம்மாவினுடைய அரசும் இந்த மக்களுக்கு என்ன தேவை என்று அறிந்து இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று அம்மா நினைத்தார்களோ அதை அம்மாவினுடைய அரசு செயல்வடிவம் கொடுத்திருக்கிறது. குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை கொண்டு வந்து, கிராமத்திலுள்ள ஏரிகள், குளங்கள் குடிமராமத்து திட்டத்தின் மூலம் மக்களுடைய பங்களிப்புடன் அரசும் சேர்ந்து இந்த திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலுள்ள ஏரிகள், குளங்கள் அத்தனையுமே தூர்வார்ப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முதல் கட்டமாக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 1519 ஏரிகளை தூர்வாரப்படுகின்றது. வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக அரசு வழங்குகிறது. விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை அவர்களுடைய நிலத்திற்கு இடுகின்றபொழுது அந்த இடத்திலே அவர்கள் செய்கின்ற பயிர் சாகுபடிகளுக்கு விளைச்சல் அதிகமாக கிடைக்கிறது. எனவே விவசாயிகள் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளது என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏரிகள், குளங்கள் தூர்வாரப்பட்டு ஆழப்படுவதால், பெய்கின்ற மழைநீர் ஏரிகளில், குளங்களில் சேமிக்கப்படுகின்றன. இந்தத் சிறப்பான திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று வைத்த கோரிக்கைகளை ஏற்று,

குடிமராமத்துக்கென 300 கோடி ரூபாய் அளித்து 2065 ஏரிகள் நடப்பாண்டிலே தூர்வாரபட உள்ளன. இதன் மூலம் நிலத்தடி நீர் உயர்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நீர்வள நிலவள திட்டங்களின் மூலம் 187 கோடி ரூபாய் செலவில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன. இதனால் மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கப்பட்டு இன்றைக்கு விவசாயிகள் நீர் கிடைப்பதற்கு இன்று அம்மாவினுடைய அரசு உருவாக்கியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரியலூர் மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம்.

தடுப்பணையை பொறுத்தவரை, மூன்றாண்டுகளிலே தடுப்பணை கட்டுவதற்காக 1000 கோடி ரூபாய் அம்மாவினுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலமாக ஆங்காங்கே உள்ள ஓடைகள், ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு, நீர் சேமிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு நிலத்தடி நீர் உயர்வதற்கும், மக்களுக்கு தேவையான குடிநீர் கிடைப்பதற்கும் அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில் விவசாயிகள் சிறப்பாக விவசாயம் செய்த காரணத்தினால், உணவு தானிய உற்பத்தியில் கடந்த ஐந்தாண்டுகளாக இந்தியாவிலேயே 100 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை படைத்த மாநிலம் தமிழ்நாடு தான். இந்திய அளவிலே உணவு தானிய உற்பத்தியிலே அதிக தானிய உற்பத்தியை பெற்ற விருதைதமிழ்நாடு அரசு பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். க்ரிஷ் கர்மாண் விருது நான்கு முறை பெற்றிருக்கிறது.

கடுமையான வறட்சியின் காரணமாக விவசாயிகள் பயிரிட்ட பயிர்கள் கருகி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதற்காக 2247 கோடி ரூபாய் கொடுக்கபட்டிருக்கின்றன. இன்றைக்கு பெரும்பான்மையான

விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள விவசாயிகளுக்கும் விரைவில் கொடுக்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மா ஆட்சியின்பொழுது, மழை வந்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி, வறட்சி வந்தாலும் சரி, விவசாயிகள் பாதிக்கப்படும் பொழுதெல்லாம் நிவாரணம் வழங்கிய ஒரே முதலமைச்சர் இந்தியாவிலேயே புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஒருவர் தான். விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற பொழுது பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்துகிறது. இதுவரைக்கும், 1882 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு பெற்றுத் தந்திருக்கிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை பத்திரமாக குடவுனில் வைப்பதற்கு அம்மாவினுடைய அரசு எல்லா தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலும் குடவுன் கட்டியிருக்கிறது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கிட்டத்தட்ட அம்மாவினுடைய ஆட்சியில் 2011–12 முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை 3879 கிடங்குள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த கிடங்குகளிலே, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொழுது விலை குறைவாக இருக்கும். விலை குறைவாக இருக்கின்றபொழுது, அந்த விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை அந்த கிடங்குகளில் வைத்து, குறைந்த வட்டியிலே கடன் பெற்று, விலை ஏறுகின்ற பொழுது விற்பனை செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்கு அளித்திருக்கின்றது. அதேபோல விலை கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னை சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக ஒரு விவசாயி ஒரு மரத்திற்கு ஒரு வருடத்திற்கு 1000 ரூபாய்

தான் மரத்திலிருந்து வருமானம் கிடைக்கும். இன்றைக்கு அம்மாவினுடைய அரசு அந்த விவசாயிகளுக்கு மேலும் கூடுதலாக வருமானம் கிடைக்க வேண்டும் என்பதற்காக ஒரு மரத்திலிருந்து 5000 ரூபாய் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்காக நீராபானம் என்ற பானத்தை தென்னை மரத்திலிருந்து கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

உழவர் பாதுகாப்பு திட்டம்–இயற்கை மரணம் அடையும் விவசாய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 10000 ரூபாயை 20000 ரூபாயாக இன்றைக்கு அம்மாவினுடைய அரசு உயர்த்தி வழங்கியிருக்கிறது. ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் இதன் மூலம் பயனடைவார்கள்.

உயர்கல்வி, பள்ளிக்கல்வி, இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியிலே தான் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இன்றைக்கு மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, தமிழ்நாட்டில் கல்வியினுடைய வளர்ச்சி அபரிவிதமாக இருக்கின்றது. 2011 ஆம் ஆண்டு தமிழகத்திலே உயர்கல்வி படிக்கின்றவர்களுடைய எண்ணிக்கை 21 சதவீதமாக இருந்தது , அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அம்மா ஆட்சி பொறுப்பேற்கும் பொழுது 2011 ல் 100 க்கு 21 பேர் தான் உயர்கல்வி படிக்கின்ற எண்ணிக்கை இருந்தது. ஆனால் அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கல்வியில் எடுத்த நடவடிக்கை மற்றும் புரட்சிகரமான திட்டங்களின் காரணமாக இன்றைக்கு படிப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. இந்தியா அளவிலே 24.5 சதவீதம் தான் இருக்கிறது. ஆனால், அம்மாவினுடைய திட்டங்களினால், தமிழ்நாட்டில் 2016 ஆம் ஆண்டு வரை உயர்கல்வி சேர்க்கை விகிதம் 44.3 சதவீதம் பேர் உயர்கல்வி படிக்கின்றார்கள். இதற்கு என்ன காரணம்

என்னவென்றால், படிக்கும் மாணவ மாணவர்களுக்கு சீருடை வழங்கி, விலையில்லா நோட்டு புத்தம், கொண்டு செல்வதற்கு பை, பள்ளிக்கு செல்வதற்கு சைக்கிள், அங்கே விஞ்ஞான கல்வி படிப்பதற்கு கம்ப்யூட்டர், இந்தியாவிலேயே விலையில்லா கம்ப்யூட்டர் வழங்கிய ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். வசதி படைத்த மாணவ மாணவிகள் 14000 ரூபாய் செலவு செய்து கம்ப்யூட்டர் வாங்கி, தொழில் கல்விக்கு செல்ல முடிகிறது. ஆனால், நல்ல திறமை இருந்தும், கல்வி அறிவு இருந்தும், வசதி இல்லாத குடுபத்தில் பிறந்த மாணவ மாணவிகள் அந்த கல்விக்கு செல்ல முடியாத சூழ்நிலை. ஆகவே, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு, இதை உணர்ந்து, வசதியில்லாத ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, குடிசையில் வாழ்கின்ற மாணவ மாணவிகள் கூட உயர்கல்விக்கு செல்ல வேண்டுமென்ற உயர்நோக்கத்தோடு, நல்ல கல்வி அறிவை கொடுத்த ஒரே முதலமைச்சர் இந்தியாவில் புரட்சித்தலைவி அம்மாஅவர்கள் தான். இன்னும் 10 ஆண்டுகாலம் கழித்துப் பார்த்தால், தமிழகம் ஒரு விஞ்ஞான உலகமாக அம்மாவின் திறமையால் மாற்றப்பட்டது என்று இந்த நாட்டுமக்கள் பாராட்டுவார்கள். அம்மா கொடுத்த ஒவ்வொரு திட்டமும் உயிரோட்டம் உள்ள திட்டம். யார் ஆட்சிக்கு வந்தாலும், அம்மாவிடைய திட்டத்தை நிராகரிக்க முடியாது.

அம்மாவினுடைய ஆட்சியிலே ஏழை, எளிய மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக கடந்த ஆறாண்டு காலத்திலே அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி 21, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி 24, பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி 16, பொறியியல் கல்லூரி 4, இப்படி ஆறு ஆண்டுகளிலே 65 கல்லூரிகள் உருவாக்கி, நம்முடைய மாணவ செல்வங்கள் ஏழை, எளிய, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் குறைந்த கட்டணத்திலே அந்தந்த

பகுதியிலே உயர்கல்வி படிப்பதற்கு வழிவகை செய்த ஒரே தலைவி புரட்சித்தலைவி அம்மா என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அம்மா வழியில் வந்த அம்மாவினுடைய அரசும் இந்த ஆண்டு, அறிவியல் கல்லூரி–8, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி–3, ஆக 11 கல்லூரிகள் இந்த ஆண்டு கொடுத்திருக்கின்றது. ஆக இந்த கல்லூரிகள் மூலமாக ஆங்காங்கே இருக்கின்ற ஏழை, எளிய மாணவர்கள் உயர்கல்வி படிப்பதற்கு அடித்தளமாக அமைந்திருப்பது அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் தான் 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரே நாளில் 21,800 பள்ளி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு ஆணை வழங்கி சாதனை படைத்த முதலமைச்சர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஏனென்றால், அதற்கு முந்தைய அரசு, இன்றைக்கு பள்ளிகளில் இருக்கின்ற காலிப்பணியிடங்களை நிரப்பவில்லை. அதனால் கல்வித்தரம் குறைந்தது. ஆனால் கடந்த 6 ஆண்டுகளில், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அத்தனை காலிப்பணியிடங்களையும் நிரப்பி ஒரே நேரத்தில் அவர்களுக்கு பணியாணை வழங்கிய பெருமை அம்மாவைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, 2017–18ஆம் ஆண்டு பட்ஜெட்டில் பள்ளிக்கல்விக்கு ஆண்டுக்கு 27,932 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மற்ற துறையைக்காட்டிலும்,

கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது, அதிக நிதி ஒதுக்கீடு செய்து சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு என்று இந்த நூற்றாண்டு விழாவின் மூலமாக தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதுதவிர, 438 கோடி ரூபாய் செலவில் உயர்தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள், 60 கோடி ரூபாய் செலவில் அறிவுத்திறன் வகுப்பறைகள் மற்றும் நடப்பாண்டில் 391 கோடி ரூபாய் செலவில் பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்படுகின்றன.

அதேபோல, வீட்டுவசதி திட்டத்தின் மூலமாக இன்றைக்கு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் ஏழை, எளியோருக்கு வீடுகட்டுகின்ற அற்புதமான திட்டத்தை மத்திய அரசுடன் இணைந்து செயலாற்றுவதற்காக ஒவ்வொரு வீட்டிற்கும் ரூபாய் 2 லட்சத்து 10 ஆயிரம் வழங்கப்படுகின்றது. அம்மாவினுடைய அரசு, இந்தத் திட்டத்தில் கவனம் செலுத்தி விண்ணப்பத்த ஏழை, எளிய மக்கள் அனைவருக்கும் வீடுகட்டுவதற்கு ஆணை வழங்குகின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள், இராமேஸ்வரம் கூட்டத்தில் பேசியபொழுது தமிழ் நாட்டிற்கு எத்தனை இலட்சம் வீடுகள் வேண்டுமானாலும் நான் தருகின்றேன் என்று பேசினார்.

நெசவாளிகளுக்கு விலையில்லா மின்கட்டண சலுகை, விசைத்தறி தொழில் செய்பவர்களுக்கு மின்கட்டண சலுகை, வறட்சி காலங்களில்,

கால்நடைகளுக்கு குறைந்த விலையிலே பசுந்தீவனம் அம்மாவினுடைய ஆட்சியில் வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்க்கட்சியினர் பல்வேறு கூட்டங்களில் இந்த அரசு நாட்டு மக்களுக்கு என்ன செய்திருக்கின்றது என்று கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். மக்கள் அனைவருக்கும் தெரியும். பருவமழை பொய்த்ததின் காரணமாக, தமிழகத்திலே 140 ஆண்டு காலம் இல்லாத கடும் வறட்சி. அணைகளில், குளங்களில், ஏரிகளில் நீர் கிடையாது. நிலத்தடி நீர் 1000 அடிக்கும் கீழ் சென்று விட்டது. எனவே, குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு, அம்மாவினுடைய அரசு தேவையான நிதியுதவி செய்து, போர்க்கால அடிப்படையில் எடுத்து, அதனை தீர்த்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடு, இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து 15.8.2017 வரை மாநிலம் முழுவதும் 6872 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 33,139 திட்டப்பணிகளை தொடங்கி வைத்தும், 1114 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4199 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் வைத்துள்ளது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2016–17–ஆம் ஆண்டில், 22,71,000 மக்கள் பயன்பெறும் வகையில் 960 கோடியே 33 இலட்சம் ரூபாய் 24 கூட்டுக் குடிநீர் திட்டங்கள். மணல் குவாரிகளை அரசே இன்றைக்கு ஏற்று, நடத்தி வருகின்றது. அம்மாவினுடைய அரசு இந்த

நடவடிக்கையை எடுத்து வருகிறது. அம்மா அவர்கள் தேர்தல் நேரத்திலே கருவுற்ற தாய்மார்களுக்கு வழங்கப்படும் நிதியை உயர்த்தி வழங்குவேன் என்று குறிப்பிட்டவாறு, இன்றைக்கு அம்மாவினுடைய அரசால், ரூபாய் 12,000–லிருந்து ரூபாய் 18,000 ஆக உயர்த்தி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தியாவில், தமிழகத்தில் மட்டும் தான், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கருவுற்ற ஏழைப் பெண்களின் குழந்தைகள் நன்றாக, ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்பதற்காக, சிந்தித்து, சிந்தித்து, அம்மாவினுடைய சிந்தனையிலே உதயமான அற்புதமான, உன்னதமான திட்டம் அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம் என்ற திட்டத்தை கொண்டு வந்திருக்கின்றார்கள். குழந்தைகள் பிறந்தவுடனே நலத்திட்ட உதவிகள் பெறுகின்ற ஒரே அரசு, அம்மாவினுடைய அரசு தான்.

பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சியிலும், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலும் முழுக்க, முழுக்க ஏழைகளுக்காக உருவாக்கப்பட்ட திட்டம், ஏழைகளுக்கு பொருளாதாரத் தடை நீக்கி, நேசக்கரம் நீட்டி, ஏழைப் பெண்களின் குடும்பத்தை வாழவைக்கும் தாலிக்குத் தங்கம் வழங்குகின்ற திட்டம் – 4 கிராம் தங்கத்திலிருந்து 8 கிராமாகவும், திருமண உதவித் திட்டம் – ரூபாய் 25000–லிருந்து ரூபாய் 50000–ஆகவும், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், தமிழ்நாட்டில்

மட்டும் தான் அம்மாவினுடைய அரசு உயர்த்தியுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

வேலைவாய்ப்பற்றோருக்கு உதவித் தொகை இரட்டிப்பாக்கி, கடந்த 6 மாத காலத்தில் மட்டும் 57000 பயனாளிகளுக்கு ரூபாய் 13 கோடி வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப அட்டைக்கு மாற்றாக, ஸ்மாட் கார்டு திட்டம் அம்மாவினுடைய அரசிலே செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏதாவது தொல்லை கொடுப்பதற்காக ஒரு சிலர் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இது பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் உருவவக்கப்பட்ட அண்ணா தி.மு.க. இன்றைக்கு எதிரிகளால் பல்வேறு சங்கடங்களை அனுபவித்து, சோதனைகளை சந்தித்து, இந்த இயக்கத்தை தமிழ்நாடு மக்களின் மனத்தில் மேம்படச்செய்து, தமிழர்களின் இதயத்தில் 11 ஆண்டுகாலம் நல்லாட்சி தந்தவர்கள் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து, பல்வேறு சோதனைகளை சந்தித்து, ஏச்சுக்கள், பேச்சுகள் அனைத்தையும் சந்தித்து, வெற்றி கண்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், வசதிபடைத்த மக்கள் அனுபவிக்கும் வசதிகளை, ஏழை, எளிய, நடுத்தர மக்களும் பெறவேண்டுமென்று மக்களின் ஆட்சி நடத்தியவர், மக்களின் இதயங்களில் இடம்பெற்றவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இருபெரும் தலைவர்களின் ஆசியாலும், ஆன்மாவாலும் நடைபடுத்தப்படுகின்ற இந்த அரசு, மற்றும்

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆன்மா எங்கள் பக்கம் பலமாக இருக்கும்வரை எவராலும் இந்த ஆட்சியையும், கட்சியையும் மக்களின் இதயத்திலிருந்து ஒருபோதும் பிரிக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அரசு ஊழல் அரசு என்று பேசுகின்றார்கள். நேற்று வரை எங்களோடு இருந்தார்கள், ஆட்சியில் பங்கெடுத்தார்கள். திடீரென்று, இன்று எப்படி ஊழல் அரசு என்று குற்றம் சாட்டுகின்றார்கள் என்று அவர்களுக்குத் தான் தெரியும், அவர்களுடைய மனசாட்சிபடியே நாங்கள் விட்டுவிடுகின்றோம்.

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் சில திட்டங்கள் இன்றைக்கு நடைமுறைபடுத்தப்பட்டது

மேலும், புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

## <u>புதிய அறிவிப்புகள்</u>

### அரியலூர் மாவட்டம் – அறிவிப்புகள்

- ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்திற்கென கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நஷ்டஈடு வழங்குவது குறித்து ஆய்வு செய்ய ஒரு உயர்மட்டக் குழு அமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் விரைந்து நஷ்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- உடையார்பாளையம் வட்டம், வான்குடி கிராமத்தில் வெண்ணங்குழி ஓடையின் குறுக்கே பாலம் கட்டப்படும்.

- திருமாணர் ஒன்றியம், வாரணவாசி கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலையில், மருதையாற்றின் குறுக்கே கூடுதலாக ஒரு பாலம் அமைத்து, சீரான போக்குவரத்துக்கு வழிவகை செய்யப்படும்.

- அரியலூர் ஊராட்சி, இடையாத்தன்குடி கிராமத்தில், பெரிய திருக்கோணம் சாலையில் ஓர் உயர்மட்ட பாலம் கட்டப்படும்.

- அரியலூர் மாவட்டம், மணக்கால் கிராமத்தில் ஒரு கால்நடை கிளை நிலையம் ஏற்படுத்தப்படும்.

- அரியலூர் மாவட்டம், கல்லங்குறிச்சி கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படும்.

- அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியத்தை சார்ந்த பழமைவாய்ந்த கரைவெட்டி பறவைகள் சரணாலயம் மேம்படுத்தப்பட்டு, பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள ஏரி தூர்வாரி புதுப்பிக்கப்படும்.

இந்த சீர்மிகு விழாவிற்காக ஒற்றுமையோடு
உழைத்த கழகப் பிரதிநிதிகளுக்கும்
கழகத் தொண்டர்களுக்கும்,
பொதுமக்களுக்கும், பலவகையிலும்
ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்களுக்கும்,
காவல்துறையினருக்கும் பாராட்டுகளையும்,
வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே!
நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி! வணக்கம்!

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**